පැෆ්රල්

දිනය -2020 ජූලි **01**

**මාධ්‍ය නිවේදන අංකය -20/පාර්ලිමේන්තු/01**

# මැතිවරණ නිරීක්ෂණයට 5000ක් සූදානම්
# පාර්ලිමේන්තු මහ මැතිවරණය-2020

## මැතිවරණයේ පසුබිම

### පාර්ලිමේන්තුව විසුරුවා හැරීම සහ මැතිවරණය ප්‍රකාශයට පත් කිරීම

1978 නව ජනරජ ආණ්ඩු ක්‍රම ව්‍යවස්ථාව යටතේ පත්වූ අටවන පාර්ලිමේන්තුව 2015 අගෝස්තු මස 17 වන දින පැවති පාර්ලිමේන්තු මහ මැතිවරණයෙන් පත් වූ මහජන නියෝජිතයින්ගෙන් සමන්විත වන අතර එය පළමු වරට රැස්වූයේ 2015 සැප්තැම්බර් මස 02 දිනදීය. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 62(2) ව්‍යවස්ථාව අනුව පාර්ලිමේන්තුවේ ආයු කාලය වසර 5කි. ඒ අනුව පාර්ලිමේන්තුව 2020 සැප්තැම්බර් 02 දින දක්වා බලාත්මක වේ.ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 70(2) ව්‍යවස්ථාව යටතේ ජනාධිපතිවරයාට පැවරී ඇති බලතල අනුව වසර 4 1/2 ඉක්මවූ වහාම එනම් 2020 මාර්තු මස 02 දින හා අංක 2165/8 දරණ අති විශේෂ ගැසට් පත්‍රය මගින් එදින මධ්‍යම රාත්‍රියේ සිට පාර්ලිමේන්තුව විසුරුවා හරින ලද අතර මාර්තු 12 සිට 19 දින මධ්‍යාහ්න 12 දක්වා නාමයෝජනා භාර ගැනීමටද මැතිවරණය අප්‍රේල් 25 දිනටද නව පාර්ලිමේන්තුව රැස්වීමේ දිනය මැයි 14 වන දිනටද නියම කරන ලදී.
එම නියමය අනුව යමින් මැතිවරණ කොමිෂන් සභාව නාම යෝජනා භාරගැනීම සිදුකරන ලදී.
මේ අතරතුර මාර්තු 10 දින ශ්‍රී ලාංකික කෝවිඩ්-19 ආසාධිත රෝගියා ශ්‍රී ලංකාවෙන් වාර්තාවිය(ශ්‍රී ලංකාවෙන් හමුවූ පළමු කොවිඩ් ආසාධිතයා වූ චීන ජාතික කාන්තාව ජනවාරි 29 වන දින වාර්ථාවිය) ඉන් පසුව කොවිඩ් ආසාදිතයින් වාර්තාවීම ආරම්භ වූ අතර එම හේතුවෙන් මාර්තු 16,17 සහ 18 දින ඇතැම් ප්‍රදේශවලට "පොලිස් ඇඳිරි නීතිය" ද පනවන ලදී. නමුත් වැඩිම නාමයෝජනා භාරගැනීම සිදුකල මාර්තු 19 වන දින ඇඳිරි නීතිය පැනවූයේ නැත.

### මැතිවරණය කල් දැමීම සහ නව මැතිවරණ දිනය

මාර්තු 21 වන දින අංක 2167/19දරණ අති විශේෂ ගැසට් පත්‍රය මගින් මැතිවරණ කොමිෂම දන්වා සිටියේ කොවිඩ්-19 තත්වය තුල මැතිවරණය අප්‍රේල් 25 වන දින නොපැවැත්වෙන බවත් නැවත මැතිවරණ දිනය ගැසට් නිවේදනයක් මගින් දැනුම්දෙන බවත්ය. මාර්තු 20 වන දින සිට දිවයින පුරාම ඇඳිරි නීතිය පැනවීම ආරම්භ වූ අතර එය පසුව ක්‍රමයෙන් දිස්ත්‍රික්ක කිහිපයකට සීමා වූ අතර

පසුව රාත්‍රි 12 සිට පාන්දර 4 දක්වා සීමා විය. පූර්ණ වශයෙන් ඇදිරිනීතිය ඉවත් කරන ලද්දේ ජූනි 28 වන දින සිටය.

මැතිවරණ කොමිෂන් සභාව මාර්තු 31 හා අප්‍රේල් 1 දින ජනාධිපතිවරයා වෙත ලිපි දෙකක් යොමු කරමින් ඉල්ලා සිටින ලද්දේ කොවිඩ්-19 වසංගතය නිසා පාර්ලිමේන්තු මැතිවරණය පැවැත්වීම නිසි පරිදී සිදුකල නොහැකි නිසා මෙන්ම පාර්ලිමේන්තුව මාස 3ක් තුල කැඳවීමට නොහැකි තත්වයක් උද්ගත වන බැවින් ඒ පිලිබඳව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 129 ව්‍යවස්ථාව යටතේ ජනාධිපතිවරයාට පැවරී ඇති බලතල අනුව ශ්‍රේෂ්ඨාධිකරණයේ මතය විමසන ලෙසයි.එයට පිලිතුරු ලෙස ජනාධිපති ලේකම්වරයා විසින් 2020 අප්‍රේල් 06 දින ලිපියක් නිකුත් කරමින් නව මැතිවරණ දිනයක් ප්‍රකාශයට පත් කර මැතිවරණය පැවැත්වීමේ මැතිවරණ කොමිෂන් සභාවේ බලතලවලට ජනාධිපතිවරයා මැදිහත් වීමට අපේක්ෂා නොකරන බැවින් ශේෂ්ඨාධිකරණයේ මතය විමසීමට අදහස් නොකරන බවයි.

පසුව මැතිවරණ කොමිෂන් සභාව මාර්තු 20 දිනය හා අංක 2172/3දරණ අති විශේෂ ගැසට් පත්‍රය මගින් නව මැතිවරණ දිනය ලෙස ජූනි මස 20වන දින නියම කරන ලදී.

මෙම නව තත්වය නිසා පාර්ලිමේන්තුව මාස තුනක් තුල කැඳවීමට නොහැකි වීම මගින් ව්‍යවස්ථා අර්බුධයක් ඇතිවන බවත් ඒ හේතුවෙන් ඒකාබද්ධ අරමුදලින් මුදල් වියදම් කිරීමට ජනාධිපතිවරයාට බලයක් නොමැති බවත් ප්‍රකාශ කරමින් පාර්ලිමේන්තුව විසුරුවා හැරීමේ ගැසට් පත්‍රය අවලංගු කරන ලෙසත් ජූනි 20 දින මැතිවරණ පැවැත්වීම තහනම් කරන ලෙසත් ඉල්ලා දේශපාලඥයන් හා පුරවැසියන් පිරිසක් ශ්‍රේෂ්ඨාධිකරණයේ මූලික අයිතිවාසිකම් නඩුවක් ගොනුකරන ලදී. එම නඩුවේ මූලික විමසීම 18 වන දින සිට ජූනි 01 දක්වා සිදුකල අතර පෙත්සම විභාගයට නොගෙන ඉවත දැමීමට ශ්‍රේෂ්ඨාධිකරණයේ පංචපුද්ගල විනිසුරු මඩුල්ල ජූනි 01 වන දින ඒකමතිකව තීරණය කරන ලදී.

<u>සෞඛ්‍යමය මාර්ගෝපදේශ ගැසට් කළ යුතුය.</u>

කොවිඩ්-19 වසංගත තත්වය තුල මැතිවරණය පැවැත්වීම පිලිබඳව සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂක ජෙනරාල් වරයා විසින් ජූනි 1වන දින සම්පාදිත මාර්ගෝපදේශ සංග්‍රහයක් මැතිවරණ කොමිෂන් සභාව වෙත ලබාදුන් අතර එය පසුව සෞඛ්‍ය අමාත්‍යාංශය විසින් ප්‍රසිද්ධ කරන ලදී.

පසුව මැතිවරණ කොමිෂන් සභාව ජූනි 10 වන දින අංක 2179/17 දරණ අති විශේෂ ගැසට් පත්‍රය මගින් මැතිවරණ දිනය අගෝස්තු 5 දින බවට නිවේදනය කරන ලදී. එහෙත් එය මේ දක්වා ගැසට් මගින් ප්‍රකාශයට පත්කර නොමැත.

මෙම මාර්ගෝපදේශ අනුව විශාල ප්‍රමාණයේ ප්‍රචාරක රැලි පැවැත්වීම නිර්දේශ නොකරයි. මැතිවරණ ප්‍රචාරණයන්ද දැඩි සෞඛ්‍යමය ක්‍රියාමාර්ගවලට යටත්ව සිදු කිරීමට උපදෙස් දී ඇත.

මෙම මාර්ගෝපදේශවලට අනුව මැතිවරණය පැවැත්වීම සම්බන්ධයෙන් පෙරහුරු ඡන්ද විමසීම් සහ පෙරහුරු ඡන්දය ගණන් කිරීම් ගණනාවක් මැතිවරණ කොමිෂන් සභාව විසින් පවත්වන ලදී.

එසේම මෙවැර මැතිවරණයේදී මැතිවරණ ප්‍රචාරය සම්බන්ධ නීති අකුරටම ක්‍රියාත්මක කිරීමට මැතිවරණ කොමිෂන් සභාව උත්සාහ ගනිමින් පවතී. ඒ අනුව එතෙක් අවසර දී තිබූ අපේක්ෂකයාගේ

රුව සහ අංකය සිය නිවසේ සහ ප්‍රචාරක කාර්යාලයේ ප්‍රදර්ශනය කිරීමට තිබූ අවසරයද ඉවත් කර ඇත.

**මැතිවරණයේ අපේක්ෂකයෝ**

මැතිවරණ දිස්ත්‍රික්ක 22 ක් සඳහා දේශපාලන පක්ෂ 40ක් සහ ස්වාධීන කණ්ඩායම් 313 මගින් අපේක්ෂකයන් 7452 තරග වදියි.මැතිවරණයේදී සමානුපාතික නියෝජන ක්‍රමය දිස්ත්‍රික් මට්ටමින් මන්ත්‍රීවරුන් 196ක් තොරාගනු ලබන අතර ජාතික ලැයිස්තු මගින් මන්ත්‍රීවරුන් 29 දෙනෙකු තෝරාගැනීමට නියමිතය.

ස්වාධීන කණ්ඩායම් විශාල ප්‍රමාණයක් ඉදිරිපත් වීම මගින් මැතිවරණයේ මෙහෙයවීම සංකීර්ණ කර ඇත. මැතිවරණයට ඉදිරිපත්වීමේ පුරවැසි අයිතිය පිළිගන්නා අතරම ඇතැම් දේශපාලන පක්ෂ සහ විශේෂයෙන්ම ඇතැම් ස්වාධීන කණ්ඩායම් ඉදිරිපත් වී ඇත්තේ තම කණ්ඩායමේ ජයග්‍රහනය අපේක්ෂාවෙන් නොව වෙනත් දේශපාලන පක්ෂයක අපේක්ෂකයකු වෙනුවෙන් ඡන්දපොල නියෝජිතයින් පත් කිරීමට, ඡන්ද ගනන් කිරීමේ මධ්‍යස්ථාන නියෝජිත කම ලබාගැනීමට සහ ප්‍රචාරක අවස්ථා ලබාගැනීමට බව පැහැදිලිය. මෙම පුද්ගලික අරමුණු ඉටුකිරීම සඳහා ඡන්ද පත්‍රිකාවේ දිග වැඩි කිරීමේ සිට විශාල අතිරේක වියදමක් සහ ශ්‍රමයක් වැය කිරීමට මැතිවරණ කොමිෂන් සභාවට සිදුවී ඇත.

ස්වාධීන කණ්ඩායම් 34ක් ඉදිරිපත් වී ඇති දිගාමඩුල්ල දිස්ත්‍රික්කයේ මෙම තත්වය වඩාත් කණගාටුදායකය. කොමිෂන් සභාව විසින් නියමකර ඇති ඇපමුදල ඉතා අඩු අගයක් ගැනීම ස්වාධීන කණ්ඩායම් වැඩි වීමට එක් හේතුවකි.

## පැෆ්රල් මැතිවරණ නිරක්ෂණ සූදානම

පැෆ්රල් සංවිධානය පාර්ලිමේන්තු මැතිවරණය නිරීක්ෂණය කිරීම සඳහා අවශ්‍ය සියලු කටයුතු මේ වන විට සූදානම් කර ඇති අතර  එම සියලුම කටයුතු කොවිඩ් 19 තත්ත්වය තුළ සෞඛ්‍ය අමාත්‍යංශය නීත්‍යනුකුල සෞඛ්‍ය උපදෙස්වලට අනුගතව සිදුවෙමින් පවතී. සමස්ත මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය අදියර කිහිපයක් යටතේ ක්‍රියාත්මක වේ.

1 පූර්ව මැතිවරණ අවධිය
2 නිහඬ කාල සීමාව
3 මැතිවරණ දින
4 පශ්චාත් මැතිවරණ කාල සීමාව

## පූර්ව මැතිවරණ අවධිය

පූර්ව මැතිවරණ අවධිය අප මැතිවරණය ප්‍රකාශයට පත්කළ දින සිට මැතිවරණ දිනය දක්වා සැළකිල්ලට ගනු ලබන අතර මෙවර මැතිවරණයේ ස්වභාවය අනුව එයද කොටස් දෙකක් යටතේ අපගේ නිරීක්ෂණයට භාජනය වේ. එනම්, මැතිවරණය ප්‍රකාශයට පත්කළ දිනයේ සිට මනාප අංක

නිකුත් කිරීම දක්වා කාලය සහ එතැන් සිට මැතිවරණ දිනය දක්වා කාලය පූර්ව කාලය ලෙස සළකයි.

මෙම කාලය තුළ නිරික්ෂණ කටයුතු සඳහා දිගුකාලීන නිරීක්ෂකයින් 335 දෙනෙකු සෑම ප්‍රාදේශීය ලේකම් බලප්‍රදේශයක්ම ආවරණය වන ආකාරයට යෙදවීමට කටයුතු කර ඇත. එමෙන්ම සෑම දිස්ත්‍රික්කයකම දිස්ත්‍රික් කාර්යාල පිහිටුවා ඇති අතර නිරීක්ෂණ කටයුතු සැළසුම් කිරීමට හා ක්‍රියාත්මක කිරීමට දිස්ත්‍රික් සම්බන්ධීකාරකවරුන් 25 දෙනෙකු ද ක්ෂේත්‍ර සම්බන්ධීකාරකවරුන් 25 දෙනෙකු ද ලෙස 50 දෙනෙකු යොදවා ඇත.

මීට අමතරව දිස්ත්‍රික් පැමිණිලි මධ්‍යස්ථාන සම්බන්ධීකරණය හා නිරීක්ෂණය සඳහා නිරීක්ෂකයින් 25 දෙනෙකු දැනටමත් යොදවා ඇත. ඔවුන් දෛනිකවම ඒ ඒ දිස්ත්‍රික්කයේ තත්ත්වය අප වෙත විධිමත්ව වාර්තා කරනු ඇත.

## පැමිණිලි කළමනාකරණ ඒකකය

පාර්ලිමේන්තු මැතිවරණයට අදාළ පැමිණිලි කළමනාකරණය සඳහා පැෆ්රල් ප්‍රධාන කාර්යාලය තුළ නීතිඥ මණ්ඩලයකින් සමන්විත පැමිණිලි කළමනාකරණ ඒකකයක් පිහටුවා ඇත. මෙම ඒකකයට පැෆ්රල් නිරීක්ෂකයන්ගෙන්, දේශපාලන පක්ෂවලින්, ජනතාවගෙන් ඇතුළු සියලු පාර්ශ්වයන්ගෙන් ලැබෙන පැමිණිලි අධ්‍යයනය කර අදාළ අංශ වෙතට යොමු කර පසුවිපරම් කිරීම සිදු කරනු ඇත.

## සමාජ මාධ්‍ය නිරීක්ෂණය

පසුගිය ජනාධිපතිවරණයෙන් ලැබූ අත්දැකීම් සැළකිල්ලට ගනිමින් සමාජ මාධ්‍ය නිරීක්ෂණය සඳහා විශේෂ වැඩපිළිවෙලක් මෙවර අප සැළසුම් කර ඇත. ඒ යටතේ,

- වෛරී ප්‍රකාශ
- සාවද්‍ය තොරතුරු
- නිවැරදි තොරතුරු වැරදි ලෙස අර්ථ නිරූපනය
- ජාති, ආගම්, දේශපාලන කටයුතු සඳහා භාවිතය

යන කරුණු පිළිබඳ විශේෂ අවධානයක් යොමු කරමින් නිරීක්ෂණය කිරීමට කණ්ඩායමක් යොදවා ඇති. ඔවුන්ගේ නිරීක්ෂණය දෛනිකව නීතීඥවරයෙකුගේ අධීක්ෂණයෙන් අනතුරුව මැතිවරණ කොමිෂන් සභාව වෙත යොමු කරන අතර මැතිවරණ කොමිෂන් සභාවේ අධික්ෂණයෙන් අනතුරුව එය අවශ්‍ය කටයුතු සඳහා Face Book ආයතන වෙත යොමු කරන අතර කඩිනමින් ඒවාට ක්‍රියාමාර්ග ගැනීමට ඔවුන් එකගතාවය පළකර ඇත.

## තැපැල් ඡන්ද නිරීක්ෂණය

තැපැල් ඡන්ද දායකයන් මෙවර 753,037 අයදුම් කර ඇති අතර ඉන් 47,430 ප්‍රමාණයක් ප්‍රතික්ෂේප වී ඇත. මෙවර සෞඛ්‍ය ක්ෂේත්‍රයේ සියලු දෙනාටම තැපැල් ඡන්ද අයදුම් කරන ලෙස මැතිවරණ

කොමිෂන් සභාව දන්වා ඇත. ඒ අනුව මෙවර වැඩිම තැපැල් ඡන්ද දායකයන් ප්‍රමාණයක් ඉල්ලුම්කර ඇත්තේ කුරුණෑගල දිස්ත්‍රික්කයෙනි.

පැෆ්රල් සංවිධානය දේශපාලන සංවේදීභාවයක් සහිත සහ ඡන්ද ප්‍රමාණය සැළකිල්ලට ගෙන මධ්‍යස්ථාන 856 ක් තෝරා ගෙන ඇති අතර එම ඡන්ද මධ්‍යස්ථාන සඳහා නිරීක්ෂකයින් යෙදවීමට සැළසුම් කර ඇත.

## මැතිවරණ දින නිරීක්ෂණය

මැතිවරණ දිනය තුළ ස්ථානගත නිරීක්ෂකයින් 3000ක් යෙදවීමට අදාළ පුහුණුවීම් මේ වන විට ආරම්භ කර ඇති අතර එම පිරිස තෝරාගත් මධ්‍යස්ථාන සඳහා යොදවනු ඇත. ඡන්ද මධ්‍යස්ථානයක් අතරතුර තත්ත්වය නිරීක්ෂණය සඳහා ජංගම නිරීක්ෂණ කණ්ඩායම් 200 ක් යෙදවීමට බලාපොරොත්තු වන අතර ඒ සඳහා නිරීක්ෂකයින් 1000ක් යෙදවෙනු ඇත. ඡන්ද ගණන් කිරීමේ මධ්‍යස්ථාන යෙදවීමට අපේක්ෂා කරන අතර සමස්ථ නිරීක්ෂණ ක්‍රියාවලිය සඳහා 5000ට වැඩි පිරිසක් යෙදවෙනු ඇත.

## වාර්තාවී ඇති මැතිවරණයට අදාල සිදුවීම්

රට යථා තත්ත්වයට පත්වීමෙන් පසුව නිරීක්ෂණ කාර්යය ආරම්භ කල 2020.06.15 දින දින සිට ජූලි 01 වන දින දක්වා වාර්තා වී ඇති සමස්ථ පැමිණිලි සංඛ්‍යාව 229 කි මේ අතරින් සිදුවීම් 114ක් තහවුරු කරගෙන ඇත. මෙම පැමිණිලි සලකා බැලීමේදී මැතිවරණ ප්‍රචණ්ඩ ක්‍රියා 10 ද, නීති විරෝධී මැතිවරණ ප්‍රචාරය සම්බන්ධ පැමිණිලි 132 ද, පොදු දේපළ මැතිවරණ ප්‍රචාරක කටයුතු සඳහා යොදාගැනීම් පිළිබඳව පැමිණිලි 17 ද, ලැබී ඇත. මධ්‍යස්ථානයට ලැබී ඇති මැතිවරණ පැමිණිලි සම්බන්ධයේ අදලා පියවරගැනීම සඳහා මැතිවරණ කොමිෂන් සභාව වෙත සහ දිස්ත්‍රික් මැතිරණ කාර්යාල වෙත සාක්ෂි සහිතව පැෆ්රල් සංවිධානය විසින් පැමිණිලි යොමු කරන අතර මේ වන විට එවැනි ආකාරයට යොමුකර ඇති පැමිණිලි ප්‍රමාණය 182කි. ලැබී ඇති පැමිණිලි අතරමින් වැඩිම පැමිණිලි ප්‍රමාණයක් ලැබී ඇත්තේ මහනුවර දිස්ත්‍රික්කයෙන්ය.

නාම යෝජනා දින සිට කොවිඩ් කාලය තුළ පැමිණිලි 79 ක් වාර්තා වී ඇත. මෙම සිදුවීම් අතර වාර්තා වී ඇති සිදුවීම් සියල්ලටම සහනාධාර බෙදීම්වලට අදාළව වන අතර මෙහිදී රජය විශේෂ සහනාධාර වැඩපිළිවෙලක් ක්‍රියාත්මක කළ අතර එහි ප්‍රධානම අංගය වූයේ රු.5000.00 දීමනාවයි. එය ආරම්භයේදී රාජ්‍ය නිලධාරීන් හරහා සිදුවුවද පසුකාලීනව දේශපාලන මැදිහත්වීම් හරහා සිදුවන බව වාර්තා විය. මෙවැනි ජාතික ව්‍යවසනයකදී සහනාධාර ලබාදීම රජයක වගකීම වුවද මැතිවරණයක් ක්‍රියාත්මක මොහොතක එය සංවිධානාත්මකව දේශපාලන පක්ෂයක් හෝ අපේක්ෂකයෙකු ප්‍රවර්ධනය වන ආකාරයට නොවිය යුතුය. එමෙන්ම එම කාලය තුළ අපේක්ෂයෙකු බවට පත්වී සිටින පළාත් පාලන ප්‍රධානීන් ද තම ආයතනවල සම්පත් සහනාධාර ලෙස බෙදා හැරීම හරහා දේශපාලන වාසියක් අත් කරගෙන ඇති ආකාරය නිරීක්ෂණය විය.


මැතිවරණ ප්‍රකාශයට පත්කිරීමෙන් අනතුරුව කොවිඩ් 19 වෛරසය ව්‍යාප්තිය හේතුවෙන් රට වසාදැමූ කාලය තුළදීද පැෆ්රල් නිරීක්ෂකයන් පනවා තිබූ සෞඛ්‍ය නිර්දේශයන්ට අනුකූලව

නිරීක්ෂණ කටයුතු වල නිරතවූ අතර එහිදී වැඩි වශයෙන් වාර්තාවූයේ දේශපාලන අරමුණු ඇතිව සංග්‍රහ කිරීමය.


එම නිරීක්ෂණයන්ට අනුව වැඩි වශයෙන්ම සිද්ධි වාර්තාවූයේ කෑගල්ල දිස්ත්‍රික්කයෙනි. ඊට අදාල වාර්තාවන් පහතින් දක්වා ඇත.

නාම යෝජනා දින සිට මනාප අංක නිකුත් කළ දින දක්වා (ලොක් ඩවුන් කළ) (2020.03.12 සිට ජුනි 22 දක්වා)

**බෙදාදී ඇති ද්‍රව්‍ය අනුව වර්ගීකරණය**






**දේශපාලන පක්ෂ අනුව වර්ගීකරණය**



ඉන් අනතුරුව රට යථා තත්ත්වයට පත්වීමත් සමග පැෆ්රල් සංවිධානය සිය පුලුල් නිරීක්ෂණ ක්‍රියාවලියට අවතීර්ණ වූ අතර එහිදී සිද්ධි 229 සහ ඊට අදාල මැතිවරණ නීති උල්ලංඝනයන් 235 ක් මේ වන විට වාර්තාවී ඇති අතර ඉන් සිද්ධි 10 ක් බරපතල ප්‍රචණ්ඩ ක්‍රියාවන්ට අදාලව වාර්තාවූ ඒවා වේ. රාජ්‍ය බලය, දේපළ සහ නිලධාරීන් අයුතු ලෙස භාවිතයට අදාල නීති උල්ලංඝනයන් ගණන 17 කි. ඒ පිළිබඳ දත්ත පහත පරිදි වේ.

මනාප අංක නිකුත් කළ දින සිට මේ දක්වා (2020 ජුනි 22 සිට 2020 ජූලි 01 දින දක්වා)



රාජ්‍ය බලය සහ දේපළ අයුතු ලෙස භාවිතය මෑත කාලීන මැතිවරණ ඉතිහාසයේ අවිච්චින්නව ගලා එන මැතිවරණ අක්‍රමිකතාවක් ලෙස හැඳින්විය හැකි අතර එය මැතිවරණයක නිදහස් හා සාධාරණ බවට මෙන්ම ඡන්දදායකයාගේ නිදහස් ජනමතයට පැහැදිලි ප්‍රබල බලපෑමක් එල්ලකරන්නක් වේ. දැනට වාර්තාවී ඇති ප්‍රචණ්ඩ ක්‍රියා අතර එකම දේශපාලන පක්ෂයක් අතර පවත්නා මතභේදාත්මක තත්ත්වයන් හේතුවෙන් හටගත් ගැටුම් වාර්තාවීම විශේෂත්වයක් වන අතර මෙම තත්ත්වය මැතිවරණයේ සාමකාමී බවට ප්‍රබල තර්ජනයක් ලෙස දැක්විය හැක.

පක්ෂ නායකත්වය මැදිහත්වීම මගින් මෙම තත්ත්වය මගහරවාගත හැකි බැවින් මැතිවරණ නිරීක්ෂණ ආයතනයක් ලෙස අප වගකිවයුතු දේශපාලන පක්ෂවලින් ඉල්ලා සිටින්නේ තම පක්ෂය තුළ ඇතිවන ගැටුම් කළමණාකරණය කිරීමට වැඩි අවධානයක් යොමුකරන ලෙසය.

තවද මේ දක්වා මැතිවරණ ක්‍රියාවලිය තුළදී විශේෂව දැක්විය හැකි කාරණයක් ලෙස අපේක්ෂකයන් ඡන්දදායකයන් වෙත ලබාදෙන ද්‍රව්‍ය සහ දීමනාවන් ඔවුන් සහභාගී නොවී ඔවුන්ගේ නමින් පවත්නා පදනම් හෝ සංවිධාන හරහා ලබාදීම සහ ඔවුන්ගේ නියෝජිතයන් හරහා ලබාදීම දැක්විය හැක.

මෙවැනි කූඨ උපක්‍රම හරහා මැතිවරණ ව්‍යාපාරය ගෙන යන අපේක්ෂකයන් පිළිබඳ ඡන්දදායකයන්ගේ අවධානයට ලක්වීම අතිශය වැදගත් බව අපගේ හැඟීමයි.

01/07/2020

**ஊடக அறிவித்தல் - 20/ பாராளுமன்ற/01**

## தேர்தல் அவதானிப்பு - பாராளுமன்றத் தேர்தல் 2020

1978 புதிய குடியரசு அரசியலமைப்பின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட எட்டாவது பாராளுமன்றம் 2015 ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருந்ததோடு, அது 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ஆம் திகதி முதல்முறையாக கூடியது. அரசியலமைப்பின் 62(2) உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 05 வருடங்களாகும். ஆகவே, இந்தப் பாராளுமன்றம் 2020 செப்டம்பர் மாதம் 02ஆம் திகதி வரை வலுவுடையதாக இருக்கும். அரசியலமைப்பின் 70(2) உறுப்புரையின் கீழ் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய 2020 மார்ச்சு மாதம் 02ஆம் திகதியிலான, 2165/8, ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அன்றைய திகதி நள்ளிரவிலிருந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டதோடு, மார்ச்சு மாதம் 12 தொடக்கம் 19ஆம் திகதி மதியம் 12.00 மணி வரை நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வதற்கும், 25ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கும், மே மாதம் 14ஆம் திகதி புதிய பாராளுமன்ற அமர்வை தொடங்கி வைப்பதற்குடான கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அந்தக் கட்டளைக்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவால் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனிடையே மார்ச்சு மாதம் 10ஆம் திகதி இலங்கையில் முதலாவது கோவிட் 19 தொற்றுக்கு உள்ளான நோயாளி அறிவிக்கப்பட்டார். (இலங்கையில் கண்டறியப்பட்ட கோவிட் தொற்றுக்கு உள்ளான முதலாவது நபரான சீனப் பெண்மணி ஜனவரி மாதம் 29ஆம் திகதி அறிவிக்கப்பட்டார்).அதைத்தொடர்ந்து கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்கள் அறிவிக்கப்பட்டதால் மார்ச்சு மாதம் 16, 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் ஒரு சில பிரதேசங்களுக்கு ‘பொலிஸ் ஊரடங்குச் சட்டம்’ அமுல்படுத்தப்பட்டது. எனினும், கூடுதலான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்ச்சு மாதம் 19ஆம் திகதி ஊரடங்கு அமுலில் இருக்கவில்லை.

### தேர்தல் பிற்போடப்பட்டமை மற்றும் தேர்தலுக்கான புதிய திகதி அறிவிப்பு.

மார்ச்சு மாதம் 21ஆம் திகதியிலான, 2167/19ஆம் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் தேர்தல் ஆணைக்குழு, கோவிட் 19 காரணமாக தேர்தல் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்தப்படமாட்டாது எனவும், தேர்தலுக்கான திகதி வர்த்தமானப் பத்திரிகை மூலம் மீண்டும் அறிவிக்கப்படும் எனவும் அறிவித்தது. மார்ச்சு மாதம் 20ஆம் திகதி தொடக்கம் நாடு தழுவிய மட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, பின்னர் சில மாவட்டங்களுக்கு

மட்டுப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 04 மணி வரையான காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஜூன் மாதம் 28ஆம் திகதியிலிருந்து ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டது.

மார்ச்சு மாதம் 31 திகதி மற்றும் ஏப்ரல் மாதம் 01 திகதி ஜனாதிபதிக்கு இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்த தேர்தல் ஆணைக்குழு, கோவிட் 19 தொற்று காரணமாக பாராளுமன்ற தேர்தலை திட்டமிட்ட வகையில் நடத்த முடியாது எனவும், அதனால் பாராளுமன்றத்தை மூன்று மாத காலத்தினுள் மீண்டும் கூட்ட முடியாத சூழ்நிலைமை உருவாவதால் அரசியலமைப்பின் 129ஆம் உறுப்புரையின் கீழ் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை வினவுமாறு கோரியது. அந்தக் கோரிக்கைக்கு ஜனாதிபதியின் செயலாளரினால் 2020 ஏப்ரல் மாதம் 06 திகதி அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதத்தில், தேர்தலுக்கான புதிய திகதியை அறிவித்து, தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு கொண்டுள்ள அதிகாரத்தின் மீது ஜனாதிபதி இடையீடு செய்ய விரும்பாததால் உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை கோரும் எண்ணம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணைக்குழு அதன் பின்னர் மார்ச்சு மாதம் 20ஆம் திகதியிலான மற்றும் 2172/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் ஜூன் மாதம் 20 ஆம் திகதியை தேர்தல் நடத்துவதற்கான திகதியாக அறிவித்தது.

இந்நிலையில், உருவாகியுள்ள சூழ்நிலை காரணமாக பாராளுமன்றத்தை மூன்று மாத காலத்தினுள் மீண்டும் கூட்டம் முடியாததால் அரசியலமைப்பு ரீதியான நெருக்கடி உருவாகும் எனவும், அதனால் திரட்டு நிதியத்திலிருந்து பணத்தை செலவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை எனவும் தெரிவித்து, பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையை இரத்துச் செய்யுமாறும், ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுவதை தடை செய்யுமாறு கோரி ஒரு சிலரால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு மீதான பூர்வாங்க விசாரணைகள் மே மாதம் 18ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 01ஆம் திகதி வரை நடத்தப்பட்டதோடு, அது சம்பந்தப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்ய உயர்நீதிமன்றத்தின் ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு ஏகமனதாக முடிவு செய்தது,

### சுகாதார வழிகாட்டு நெறிகள்

சுகாதாரப் பணிப்பாளர் தலைமை அதிபதியினால் ஜூன் மாதம் 01 திகதி தயாரிக்கப்பட்ட கோவிட் 19 தொற்றுக்கு மத்தியில் தேர்தலை நடத்துவது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டதுடன், அது பின்னர் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணைக்குழு ஜூன் மாதம் 10ஆம் திகதியிலான, 2179/17ஆம் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதியை தேர்தலுக்கான புதிய திகதியாக அறிவித்தது.

அந்த சுகாதார வழிகாட்டல்களின்படி பாரிய அளவிலான பிரசாரக் கூட்டங்களை நடத்த முடியாது. மேலும், தேர்தல் பிரசாரங்களை கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக நடத்த வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அந்த வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்தல் ஆணைக்குழு, பல மாதிரி தேர்தல்களையும், மாதிரி வாக்கெண்ணலையும் நடத்தியுள்ளது. அதேபோல், இம்முறை தேர்தலில் தேர்தல் பிரசாரம் தொடர்பான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த தேர்தல் ஆணைக்குழு முயற்சி எடுத்துவருகிறது. அதன்படி, வேட்பாளரின் இல்லத்திலும் பிரசார அலுவலகத்திலும் வேட்பாளரின் உருவப் படத்தையும் இலக்கத்தையும் காட்சிப்படுத்துவதற்கு இதுவரை காலம் வழங்கப்பட்டிருந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## வேட்பாளர்கள்

22 தேர்தல் மாவட்டங்களில் 40 அரசியல் கட்சிகள் மற்றும் 313 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 7452 பேர் இம்முறைத் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இத்தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி 195 உறுப்பினர்களும், தேசிய பட்டியல் மூலம் 29 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

தேர்தலில் களமிறங்கியுள்ள 34 சுயேட்சை குழுக்கள் காரணமாக தேர்தலை நடத்தும் பணி சிக்கலான ஒன்றாக மாறியுள்ளது. தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரஜைகள் கொண்டுள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம் ஒரு சில அரசியல் கட்சிகள் குறிப்பாக, ஒருசில சுயேச்சை குழுக்கள் தமது அணியின் வெற்றிக்காக அன்றி வேறு அரசியல் கட்சியின் வேட்பாளருக்காக வாக்கெடுப்பு நிலைய முகவரிகளை நியமிப்பதற்கும், வாக்கெண்ணும் நிலையத்தில் முகவர்களை அமர்த்துவதற்கும் அத்தோடு பிரச்சாரத்திற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் முன்வந்துள்ளன. இவ்வாறான தனிப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வாக்குச் சீட்டின் நீளத்தை அதிகரித்தலில் தொடங்கி பாரிய மேலதிக செலவு மற்றும் உழைப்பையும் வழங்கும் நிலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது.

திகாமடுல்லை மாவட்டத்தில் 34 சுயேச்சை குழுக்கள் போட்டியிடுகின்றமை மிகவும் கவலைக்குரியது. தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வைப்பு பணத் தொகையின் பெறுமதி மிகவும் குறைவாக உள்ளமையும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது.

## தேர்தல் அவதானிப்புக்கு ப∴வ்ரல் தயார் நிலையில்......

ப∴வ்ரல் அமைப்பு பாராளுமன்றத் தேர்தலை அவதானிப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் இன்றளவில் தயார் நிலையில் வைத்திருப்பதுடன், சகல நடவடிக்கைகளையும் கோவிட் 19 நிலைமைக்கு மத்தியில், சுகாதார அமைச்சின் சட்ட ரீதியான சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொண்டு வருகிறது. ஒட்டு மொத்த தேர்தல் அவதானிப்பு செயற்பாடு பல கட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

1. தேர்தலுக்கு முந்திய காலம்
2. அமைதியான காலம்
3. வாக்கெடுப்பு தினம்
4. தேர்தலுக்கு பிற்பட்ட காலம்

## தேர்தலுக்கு முந்திய காலம்

தேர்தல் அறிவிப்பு வெளியான திகதி தொடக்கம் வாக்கெடுப்பு நடத்தப்படும் திகதி வரையான காலத்தை நாம் தேர்தலுக்கு முந்திய காலமாக கருதுவதோடு, இம்முறை தேர்தலின் தன்மைக்கேற்ப அக்காலப்பகுதியும் இரண்டு கட்டங்களின் கீழ் அவதானிக்கப்படுகின்றது. அதாவது, தேர்தல் அறிவிப்பு வெளியான திகதியிலிருந்து விருப்பு இலக்கங்கள் வழங்கப்பட்ட காலம் மற்றும் அது தொடக்கம் வாக்கெடுப்பு நடத்தப்படும் திகதி வரையான காலம் தேர்தலுக்கு முந்திய காலமாக கருதப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் அவதானிப்பை மேற்கொள்வதற்காக 355 நீண்டகால அவதானிப்பாளர்களர்களை பிரதேச செயலாளர் பிரிவு ஒவ்வொன்றும் உள்ளடக்கப்படும் வகையில் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதோடு அவதானிப்பு பணிகளை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக 25 மாவட்ட இணைப்பாளர்களும் 25 கள இணைப்பாளர்களுமாக 50 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக முறைப்பாட்டு நிலைய இணைப்பாக்கம் மற்றும் அவதானிப்புக்காக ஏற்கனவே 25 அவதானிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தினசரி அந்தந்த மாவட்டத்தில் நிலவரம் பற்றி எமக்கு காணொளி மூலமாக அறியத் தருவர்.

## முறைப்பாட்டு முகாமைத்துவ பிரிவு

தேர்தலுடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக பஃவ்ரல தலைமை அலுவலகத்தில் சட்டத்தரணிகள் குழுவொன்றை உள்ளடக்கிய முகாமைத்துவ பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுக்கு பஃவ்ரலஅமைப்பின் அவதானிப்பாளர்கள், அரசியல் கட்சிகள், பொதுமக்கள் உட்பட சகல தரப்பிலிருந்தும் கிடைக்கும் முறைப்பாடுகள் ஆராயப்பட்டு அவை சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அது பற்றிய பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சமூக ஊடகங்களை அவதானித்தல்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கவனத்தில் கொண்டு சமூக ஊடகங்களை அவதானிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நாம் வகுத்துள்ளோம். அதன் கீழ்,

- வெறுப்பு பேச்சு
- போலியான தகவல்கள்
- சரியான தகவல்களுக்கு பிள்ளையான பொருள்கோடல் வழங்கல்
- அரசியலுக்காக இனத்தையும் மதத்தையும் கையாளுதல்

போன்ற விடயங்கள் பற்றி விசேட கவனம் செலுத்தி அவதானிப்பை மேற்கொள்வதற்கு குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகள் தினசரி சட்டத்தரணிகளின் மேற்பார்வையின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். தேர்தல் ஆணைக்குழு அதனை ஆராய்ந்து அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக FACE BOOK நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும் என்பதுடன், அவை தொடர்பில் துரித நடவடிக்கை எடுப்பதற்கு அந்த நிறுவனத்தாரின் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் வாக்கு அவதானிப்பு

இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக 753,037 பேர் விண்ணப்பித்திருந்ததுடன் அதில் 47,430 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இம்முறை சுகாதார துறையில் பணியாற்றும் அனைவரும் தபால் வாக்குக்காக விண்ணப்பிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதன்படி அதிகப்படியான தபால் வாக்காளர்கள் குருநாகல் மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளனர்.

ப∴வ்ரலஅமைப்பு அரசியல் ரீதியாக கூடுதல் கவனம் பெற்றுள்ள அதேபோல் வாக்கு எண்ணிக்கையை கவனத்தில் கொண்டு 856 நிலையங்களை தெரிவுசெய்து அவ்வனைத்து நிலையங்களுக்கும் தேர்தல் அவதானிப்பாளர்களை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது.

## தேர்தல் தின அவதானிப்பு

தேர்தல் தினத்தன்று 3000 நிலைய அவதானிப்புகளை ஈடுபடுவதற்கான பயிட்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் பணியில் அமர்த்தப்படுவர். மேலும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இடைப்பட்ட கள நிலைமைகளை அவதானிப்பதற்காக 200 நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட உள்ளன. அதற்கென 1000 பேர் பணியில் அமர்த்தப்படுவர். வாக்கெண்ணும் நிலையங்களில் பணியில் ஈடுபடுத்த எதிர்பார்க்கும் ஒட்டுமொத்த அவதானிப்பாளர்களின் எண்ணிக்கை 50000இற்கும் அதிகமாக உள்ளது.

## அறிவிக்கப்பட்டுள்ள தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள்


தேர்தல் அவதானிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட 15.06.2020 திகதியிலிருந்து ஜூலை மாதம் 01ஆம் திகதி வரையான காலத்தினுள் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 229 ஆகும். இவற்றில் 114 முறைப்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. கிடைத்துள்ள முறைப்பாடுகளை ஆராயும்போது 10 முறைபாடுகள் தேர்தல் வன்முறையுடன் சம்பந்தப்பட்டதாகவும், 132 முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கை தொடர்பாகவும், 17 முறைப்பாடுகள் பொதுச் சொத்துக்களை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தியுள்ளமை தொடர்பாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கிடைக்கின்ற குறைபாடுகளை உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சான்றுகளுடன் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு இதுவரை 182 முறைப்பாடுகள் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இதனிடையே அதிகப்படியான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக கண்டி மாவட்டம் காணப்படுகின்றது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து கோவிட் 19 காலப்பகுதியில் 79 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் நிவாரணம் வழங்கலுடன் தொடர்பு பட்டவையாக இருப்பதுடன் குறிப்பாக, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசேட நிவாரண வேலைத்திட்டத்தின் முக்கிய அங்கமாக மக்களுக்கு 5000 ரூபா செலுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம். தொடக்கத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஊடாக 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டபோதும், பிற்காலத்தில் அது அரசியல் இடையீட்டுடன் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறான ஒரு பேரிடரின்போது மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளபோதும், தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் அதனை திட்டமிட்ட வகையில் ஓர் அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் முன்னெடுக்கக் கூடாது. அதேபோல் அக்காலப்பகுதியில் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள உள்ளூராட்சித் தலைவர்களும் தமது நிறுவனங்களின் வளங்களை நிவாரணமாக வழங்கி அரசியல்ரீதியான அனுகூலத்தைப் பெற்றுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.


தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான நிலையில் கோவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியிலும் ப∴வ்ரல் நிறுவனத்தின் அவதானிப்பாளர்கள் விதிக்கப்பட்டிருந்த சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக அவதானிப்பு பணியில் ஈடுபட்டனர். அதன்போது அறிவிக்கப்பட்ட சம்பவங்களில் அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட உபசரிப்புகள் அதிகம் பதிவு செய்யப்பட்டன.

அந்த வகையில் கூடுதலான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக கேகாலை மாவட்டம் காணப்படுகின்றது. அதற்கான விபரங்களை பின்வரும் வரைபடத்தில் காணலாம்.

## பகிரப்பட்ட பொருட்களின்படி வகைப்படுத்தல்





## அரசியல் கட்சிகளுக்கமைய வகைப்படுத்தல்




அதன் பின்னர் நாடு இயல்புநிலைக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து ப.ஃ.வ்ரல் நிறுவனம் தனது விரிவான அவதானிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தது. அதன்போது 229 சம்பவங்களும், அதனுடன் சம்பந்தப்பட்ட 235 தேர்தல் சட்டமீறல்களும். அறிவிக்கப்பட்டன. அவற்றில் 10 சம்பவங்கள் பாரதூரமான வன்முறையுடன் தொடர்புப்பட்டவையாகும். அரச அதிகாரம், பொதுச் சொத்துக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை தவறாக பயன்படுத்தியுள்ளமை தொடர்பான 17 சட்ட மீறல் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு,

**மாவட்டங்களுக்கமைய அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் (22-06-2020 – 01-07-2020)**



**சட்டமீறல்களுக்கு அமைய வகைப்படுத்தல்**




அரசு அதிகாரத்தையும் பொதுச் சொத்துக்களையும் தவறாக பயன்படுத்துதல் அண்மைக்கால தேர்தல் வரலாற்றில் தொடர் நிகழ்வாக காணப்படுகின்றது. இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மற்றும் வாக்காளரின் சுதந்திரமான அபிப்பிராயத்திலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களை ஆராயும்போது ஒரே கட்சியில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக உருவாகியுள்ள மோதல்கள் முக்கிய விடயமாக மாறியுள்ளதோடு, இது அமைதியான தேர்தலுக்கு பாரிய அச்சுறுத்தலாகவும் உள்ளது.

கட்சியின் தலைமை இடையீடு செய்வதன்மூலம் இதற்கு தீர்வு காண முடியும் எள்பதால், தேர்தல் அவதானிப்பு நிறுவனம் என்ற வகையில் உட்கட்சி முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென நாம் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், வேட்பாளர்களால் வாக்காளர்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களின் பங்குபற்றல் இன்றி அவர்களின் பெயரில் உள்ள அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் ஊடாகவும், அவர்களுடைய முகவர்கள் ஊடாகவும் வழங்கப்படுகின்றமை இதுவரையான தேர்தல் செயற்பாட்டில் அவதானிக்க முடிந்த முக்கியமான நிகழ்வாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் செயற்பாடுகளை இவ்வாறான தந்திரச் செயல்கள் ஊடாக முன்னெடுக்கும் வேட்பாளர்கள் தொடர்பில் வாக்காளர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென நாங்கள் கருதுகின்றோம்.